ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் உரித்தாகும்.

பகுதி I

1. (i) இரண்டாம் அகபா உடன்படிக்கையின் நியதிகளைக் குறிப்பிடுக.
   (ii) கலீபா அபூபக்ர் (ரழி) அரசாட்சியின்போது எதிர்கொண்ட சவால்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.
   (iii) கலீபா உமர் (ரழி) நீதி பரிபாலனத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை ?
   (iv) உமையா கிலாபத்தின் வீழ்ச்சிக்கு ஏதுவான காரணிகள் **ஐந்தைக்** குறிப்பிடுக.
   (v) கலீபா அபூ ஜஃபர் மன்ஸூரின் சேவைகள் பற்றி மதிப்பிடுக.

2. (i) நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அல்-குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறை பற்றிச் சுருக்கமாக விளக்குக.
   (ii) ஸுன்னாவின் முக்கியத்துவத்தை குர்ஆனின் ஆதாரத்துடன் எடுத்துக்காட்டுக.
   (iii) ‘இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டது’ என்ற கருத்து முஸ்லிம் உம்மாவில் ஏற்படுத்திய தாக்கத்தை விளக்குக.
   (iv) இஜ்மா அஸ்-ஸுகூதி தொடர்பாக நிலவுகின்ற கருத்து வேறுபாட்டை விளக்குக.
   (v) பிக்ஹுக் கலை வளர்ச்சிக்கு இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

3. (i) அழகியல் தொடர்பான இஸ்லாத்தின் கருத்தைத் தெளிவுபடுத்துக.
   (ii) அரபு எழுத்தணிக்கலையில் முஸ்லிம்கள் ஆர்வங்கொள்ள ஏதுவாயமைந்த காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.
   (iii) மஸ்ஜித் கட்டடக்கலையின் சிறப்பியல்புகளை விவரிக்குக.
   (iv) அல்-ஹம்ரா மாளிகையின் அலங்காரத் தோற்றப்பாடுகளைக் குறிப்பிடுக.
   (v) முஸ்லிம்கள் பயன்படுத்திய இசைக்கருவிகளை அறிமுகப்படுத்துக.

பகுதி II

4. (i) கலீபா வலீத் பின் அப்துல் மலிக் கால முஸ்லிம் ராஜ்ய விஸ்தீரணம் பற்றி விவரிக்குக.
   (ii) சிலுவை யுத்தம் ஏற்பட்டமைக்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் விவரிக்குக.

5. (i) தஸவ்வுப் கலையின் தோற்றம், அதன் வளர்ச்சி என்பன பற்றிச் சுருக்கமாக விளக்குக.
   (ii) மருத்துவக் கலைக்குப் பங்களிப்புச் செய்த முஸ்லிம் மருத்துவர்கள் **இருவரின்** பங்களிப்பை மதிப்பிடுக.

6. (i) இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியமை பற்றிச் சுருக்கமாக விளக்குக.
   (ii) இலங்கை முஸ்லிம் சமூக மேம்பாட்டில் மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் அவர்களின் பங்களிப்பு பற்றி விவரிக்குக.

7. (i) இஸ்லாமிய சமூக அமைப்பு ஜாஹிலிய்யா சமூக அமைப்பிலிருந்து வேறுபடும் விதத்தினை விளக்குக.
   (ii) கியாஸின் முக்கியத்துவத்தை அல்-குர்ஆன், சுன்னாவின் துணையுடன் விளக்குக.

8. (i) மதீனா சாசனத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.
   (ii) பத்ரு யுத்தத்துக்கான காரணிகளையும் அதில் முஸ்லிம்கள் வெற்றியடைந்தமைக்கான காரணங்களையும் சுருக்கமாக விளக்குக.

※ ※ ※